**செ.வெ.எண்.16** **நாள்.07.12.2017.**

பத்திரிக்கை செய்தி

**<u>மார்கழி மாத ஞாயிற்றுக் கிழமைகளில் நவகைலாய சிறப்புச் சேவை</u>**

**<u>பேருந்துகள் இயக்கம்.</u>**

எதிர்வரும் மார்கழி மாத ஞாயிற்றுகிழமை தினங்களான 17.12.2017, 24.12.2017, 31.12.2017 மற்றும் 07.01.2018 ஆகிய நாட்களில் தாமிரபரணி நதிக்கரையில் அமைந்துள்ள நவகைலாய திருக்கோவில்களுக்கு பக்தர்களின் வசதிக்காக, சிறப்புச் சேவை பேருந்துகள் இயக்க, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) வ.து., திருநெல்வேலி மண்டலம் மற்றும் தூத்துக்குடி மண்டலம் மூலம் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இதற்கான பயணக்கட்டணத் தொகை, நபர் ஒன்றுக்கு ரூ.325–ஆகும். இந்த சிறப்புச் சேவை பேருந்துகள், மேற்சொன்ன 4 நாட்களிலும், காலை 07.00 மணிக்கு திருநெல்வேலி வேய்ந்தான்குளம் பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு கழ்கண்ட நவகைலாய திருச்கோவிலுக்குச் சென்று இரவுக்குள் திருநெல்வேலி வந்து சேரும்.

1) பாபநாசம்
2) சேரன்மகாதேவி
3) கோடகநல்லூர்
4) குன்னத்தூர்
5) முறப்பநாடு
6) திருவைகுண்டம்
7) தென்திருப்பேரை
8) ராஜபதி மற்றும்
9) சேர்ந்த பூமங்கலம் (புன்னக்காயல்)

திருநெல்வேலி புதிய பேருந்து நிலையம் மற்றும் தூத்துக்குடி பழைய பேருந்து நிலையம் ஆகிய இடங்களில், இந்த சிறப்புச் சேவை பேருந்துகளுக்கு, காலை 08.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை அனைத்து நாட்களிலும் முன்பதிவு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

எனவே, இந்த சிறப்புச் சேவை பேருந்துகளை பயன்படுத்தி பயன்பெற பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.**